**அபிவிருத்தி லொத்தர் சபை – 2017**
-----------------------------------------------------------------

அபிவிருத்தி லொத்தர் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று 2018 நவம்பர் 15 ஆந் திகதி சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு
----------------------------------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு
----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை அபிவிருத்தி லொத்தர் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி)**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

(i) நியமத்தின் 32 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கீட்டு நியமங்கள் மூலம் தேவைப்படுத்தப்படும் அல்லது அனுமதிக்கப்பட்டவை தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் வருமானம் செலவினங்கள் ஈடுசெய்ய முடியாத போதிலும் சபையினால் மோட்டார் சைக்கிள் விற்பனையிலான நட்டமான ரூபா 189,638 ஏனைய வருமானங்களிலிருந்து ஈடுசெய்யப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தன. மேலும் ரூபா 844,650,423 கூட்டுத்தொகையான எட்டு வங்கிக் கணக்குகளின் வரவு மீதிகள் ரூபா 105,184,705 கூட்டுத்தொகையான மூன்று வங்கிக் கணக்குகளின் செலவு மீதிகளுடன் ஈடுசெய்யப்பட்டு ரூபா 739,482,123 என நிதி நிலைமைக் கூற்றில் காசு மற்றும் அதற்கு சமமானவற்றில் காண்பிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இக்கணக்கு மீதிகள் கணக்கு குறிப்பினுள் வெவ்வேறாக காண்பிக்கப்பட்டிருந்தன.

(ii) நியமத்தின் 54 ஆம் பந்தியின் பிரகாரம் கற்பனை சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் வேறாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால ரூபா 2,243,478 தொகையான கணனி மென்பொருட்கள் (Computer Software மற்றும் இணையத்தள அபிவிருத்தி) போன்ற ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன.

(iii) நியமத்தின் 66 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கையிடப்பட்ட காலப்பகுதிக்கு பின்னர் 12 மாதங்களுக்குள் தீர்வையாகும் என எதிர்பார்க்கும் சொத்துக்கள் நடைமுறை சொத்துக்களாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,012,526,906 பெறுமதியான ஓராண்டிற்குள் முதிர்வடையும் 11 நிலையான வைப்புக்களின் பெறுமதி நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07**

மீளாய்வாண்டின் போது பணமாக கிடைத்திருந்த சபையின் வட்டி வருமானம் ரூபா 119,182,529 ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் அது ரூபா 120,768,549 எனக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் முதலீட்டு செயற்பாட்டில் உருவான காசுப் பாய்ச்சல் ரூபா 1,586,020 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

(i) நியமத்தின் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான செயற்திறனான ஆயுட் காலம் வருடாந்த மீளாய்வு செய்யப்படாத காரணத்தினால் ரூபா 165,556,090 தொகை கிரயத்தையுடைய நிலையான சொத்துக்கள் முற்றாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டது. அதன் பிரகாரம் ஏற்பட்டுள்ள மதிப்பீட்டுத் தவறினை இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) நியமத்தின் 34 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம், சபையின் காணி மற்றும் கட்டிடங்கள் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னரும் இயந்திரங்கள் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நியமத்தின் 55 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம், சபையினால் சொத்தொன்றின் பெறுமானத் தேய்விடல் அது பயன்பாட்டிற்கு பொருத்தமான நிலைமைக்கு கொண்டு வந்ததன் பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டின் விகிதத்திற்கு பெறுமானத்தேய்வு செய்வதற்கும் விற்பனை ஆண்டிற்காக பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளாமை சபையின் கொள்கையென நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19**

நியமத்தின் 63 பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம், ஊழியர் பணிக்கொடைக்கான பொறுப்புக்களை மற்றும் சொத்துக்களை வெவ்வேறாக இனங்கண்டு அவற்றை ஒன்றிற்கு ஒன்று மாற்றீடு செய்வதன் மூலம் ஏற்படும் தற்போதைய தேறிய பணிக்கொடைப் பெறுமதியை நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்காமல் பணிக்கொடை சொத்துக்கள் மற்றும் தொடர்புடைய பொறுப்புக்கள் நிதிநிலைமைக் கூற்றில் வெவ்வேறாகக் காட்டப்பட்டிருந்தன.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த நிலையான வைப்புக்களின் பெறுமதியான ரூபா 1,050,939,528 தொகையினுள் பணிக்கொடை முதலீட்டு பெறுமதியான ரூபா 38,412,622 தொகை குறிப்பிட்ட காரணத்தினால் நிலையான வைப்புக்களின் பெறுமதி மற்றும் பணிக்கொடை முதலீட்டுப் பெறுமதி முறையே அப்பெறுமதியால் அதிகரித்தும் குறைத்தும் நிருபணமாகியிருந்தது.

(ஆ) 2017 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களிலிருந்து பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த வரவேற்புக் கவுன்டரினதும் தகவல் தொழில்நுட்ப பிரிவின் நிர்மாணங்களுக்குரித்தாக 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 230,999 மற்றும் ரூபா 209,171 தொகையான பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஏப்ரல் 01 ஆந் திகதி ரூபா 72,600 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட காற்றுச் சீராக்கி இயந்திரத்தின் 2017 ஆம் ஆண்டிற்காக பெறுமானத்தேய்வாக ரூபா 13,612 மாத்திரம் சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 54,698 பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் பெறுமானத்தேய்வுச் செலவினம் ரூபா 41,086 ஆல் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

---------------------------------------------------------------------------

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் பதவியணிக்கான சகல படிகளின் கூட்டுத்தொகை மற்றும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட படிகளின் பெறுமதிக்கு இடையே ரூபா 3,709,070 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. அவ்வாறே லொத்தர் சீட்டிழுப்பிற்காக பதவியணியினருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள கொடுப்பனவுகளுகுரிய நிதிப்பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவு சம்ர்ப்பித்த தகவல்களுக்கு இடையே ரூபா 2,828,300 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் இவ்வேறுபாடுகளுக்காக காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

--------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 13,249,192 கூட்டுத்தொகையான 04 செலவினக் கணக்கு மீதிகள் தொடர்பாக முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் |
|---|---|---|---|
| | ------------- | ------------- | ------------------------------------------------------------- |
| | | ரூபா. | |
| (i) | வாகனங்களுக்கான வாடகை செலவு | 9,317,866 | - ஓட்டம் தொடர்பான மாதாந்த அறிக்கை (Monthly Record)<br>- வாகனங்களை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்காக அமைச்சு செயலாளரின் விசேட அங்கீகாரம் |

| | | | |
|---|---|---|---|
| (ii) | பதவியணியினர் பயிற்சி செலவினம் | 1,740,549 | - 2017 ஆம் ஆண்டின் பயிற்சி திட்டம்<br>- ரூபா 100,000 ஆன வளவாளர் படிகளுக்குரிய கொடுப்பனவு தீர்மானித்த அடிப்படை<br>- பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பங்குபற்றியவர்களின் வருகை பதிவேடு<br>- Multi Media Diploma பயிற்சி பாடநெறிக்கான அழைப்பு கடிதம்<br>- சுற்றறிக்கைகள் / உள்வாரியான<br>- பணிப்பாளர் சபை தீர்மானங்கள் மற்றும் பத்திரங்கள்<br>- சபை மற்றும் பயிற்சியாளர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கை |
| (iii) | நடமாடும் வண்டிகளின் சாரதிகளுக்கான மேலதிகநேர படிகள் | 1,047,590 | - நடமாடும் லொத்தர் விற்பனையில் ஈடுபட்டுள்ள சாரதிகளுக்கான மேலதிகநேர படிகளுக்குரிய வருகை வெளியேறல் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் |
| (iv) | விற்பனை மேம்படுத்தல் / கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கில்களுக்குரிய எரிபொருள் செலவினம், தவணை சேவைகள் மற்றும் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு செலவினம் | 1,143,187 | - மோட்டார் சைக்கில்களுக்குரிய ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் சம்பவக் குறிப்புக்கள் அல்லது ஓட்டத்தில் ஈடுபடுத்திய இடம் மற்றும் கடமை உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் |
| | | -------------------<br>13,249,192<br>========= | |

(ஆ) மீளாய்வாண்டிற்கான சபையின் பணிப்பாளர் சபை பத்திரம் மற்றும் பணிப்பாளர் சபைத் தீர்மானங்கள் முறையாக பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் கூடிய விரைவில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்குமாறு 2016 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு ஐயவினாக்கள் மற்றும் தகவல் கோரல் கடிதங்கள் பலவற்றின் மூலம் கோரப்பட்டிருந்தன. அதே போல் அக்காலப்பகுதியில் நடைபெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் போதும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. எனினும் கொடுக்கல் வாங்கல்கள் செயற்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டதும் 02 மற்றும் 04 இற்கும் இடைப்பட்ட மாதங்களுக்கு காலதாமதத்தின் பின்னர் அவ்வறிக்கைகள் சமர்ப்பிக்கும் நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருந்தது. அதனால் இந்த அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள சில நட்டங்கள் மற்றும் ஆபத்துக்கள் என்பவற்றை குறைப்பதற்காக சபைக்கு இருந்த சந்தர்ப்பங்கள் இல்லாமல் போயுள்ளது. என்ற சந்தேகத்தினை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதிருந்தது.

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வொக்ஷோல் வீதியின் 234 ஆம் இலக்க கட்டிடம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒருதரப்பான சபையினால் மீறப்பட்ட காரணத்தினால் சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 5,700,000 தொகை 14 ஆண்டுகளாக அறவிட முடியாமல் இருந்தது.

(ஆ) சபையினால் 2012 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு அடிப்படையில் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கில்களுக்காக 06 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அதற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 192,817 தொகை மற்றும் 1 வருடத்திற்கும் 5 இற்கும் இடைப்பட்ட காலமாகவும் விற்பனைகூட நிர்மாணத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 856,498 உமாக ரூபா 1,049,315 கூட்டுத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டம் | |
| | 11(அ) ஆம் பிரிவு மற்றும் 18(2) ஆம் பிரிவு | சனாதிபதி நிதியத்திற்கு நிதியத்தை வழங்குவது நிதியத்தின் பிரதான செயற்பாடொன்றாக இருந்த போதிலும், 2018 மார்ச் 03 ஆந் திகதி வரையில் சபைக்குச் செலுத்த வேண்ய நிலுவைத் தொகையான ரூபா 17,862,341 தொகை குறித்த காலப்பகுதியில் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 இன் 10 ஆம் இலக்க வருமான வரிச் சட்டத்தின் 133 ஆம் பிரிவிற்கான பின்னிணைப்பாக விநியோகிக்கப்பட்டிருந்த 2011 பெப்ரவரி 28 ஆந் திகதிய SEC 2011/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | வட்டி வருமானத்தின் மீது அறவிடப்படுகின்ற நிறுத்திவைத்தல் வரி சதவீதம் 10 ஆக இருந்த போதிலும் அதனைக் கருத்திற்கொள்ளாமல் அரச வங்கியொன்றினால் 10 சதவீதம் எனவும் மேலும் 2 வங்கிகளால் அது 8 சதவீதம் எனக் கருதி நிறுத்திவைத்தல் வரி அறவிடப்பட்டிருந்தது. அதாவது நிறுவனமொன்றிற்காக நிறுத்திவைத்தல் வரி வீதம் இரு வகையான அறவிட்டமை தொடர்பாக குறித்த வங்கிகளிடமிருந்து விசாரித்து சரியான அளவினை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் அரசின் வர்த்தமானி அறிவித்தல் | 15 சதவீதமோ அல்லது ரூபா 5 என்ற பெறுமதிகளில் கூடிய பெறுமதியில் ஒவ்வொரு லொத்தருக்கும் விலை கூட்டுவதற்கு அதிகாரம் கிடைத்திருக்கையில் லொத்தர் சீட்டொன்றின் விலை 50 சதவீதத்தினால் இல்லாவிடில் ரூபா 10 இனால் அதிகரித்தமையால் சபைக்கு ரூபா 11.2 மில்லியன் அசாதாரண அச்சிடல் செலவினமொன்றை ஏற்பதற்கு நேர்ந்திருந்தது. |

(ஈ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை மற்றும் பொது நிர்வாகச் சுற்றறிக்கை

--------------------------------------------

| | |
|---|---|
| தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 11 ஆம் பந்தி மற்றும் 2007 யூன் 12 ஆந் திகதிய 15/2007 (i) மற்றும் 2014 திசெம்பர் 26 ஆந் திகதிய 15/2007(ii) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லையை மிகைத்து இரண்டு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 241,040 தொகையும் 05 உத்தியோகத்தர்களுக்கு மொத்தம் ரூபா 2,642,120 தொகையும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் மூன்று உத்தியோகத்தர்களுக்கு இரண்டு முறை ஆதனக் கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. மேலும் 05 கடன்பெறுனர்களால் செலவிடப்பட வேண்டிய ரூபா 42,094 ஆன சட்டத்தரணிக் கட்டணங்கள் சபையினால் ஏற்கப்பட்டிருந்தது. |

(உ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

--------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 103 மற்றும் 103(1) ஊ | வாகன விபத்துக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பொலிசிற்கும் அறிக்கையிடுவது போன்று பொறுப்பு வாய்ந்த தரப்பினர் இனங்காணப்பட்டு ஏதேனும் நட்டமொன்று இருந்தால் அறவிடுவதற்குள்ள பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை 42 வாகனங்களுக்குரிய 61 விபத்துக்கள் இடம்பெற்றிருந்ததுடன் சபைக்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 2,010,948 ஆக இருந்தது காப்புறுதி நிறுவனத்திடமிருந்து மேவுகை செய்ய முடியாத அந்நட்டம் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்படாமல் சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. |
| (ii) | நிதிப் பிரமாணம் 135 | ரூபா 1,549,705 கூட்டுத்தொகையான உறுதிச்சீட்டுகளுக்கு கொடுப்பனவு பரிந்துரைத்தல், அதிகாரமளித்தல், அங்கீகரித்தல் மற்றும் கொடுப்பனவை சான்றுறுதிப்படுத்தும் போது ஆவணங்களின் சரியானதன்மையை உறுதிப்படுத்தாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப் பிரமாணம் 260 மற்றும் 389 | ஏற்பாடுகளின் பிரகாரம் கொடுப்பனவுகளுக்குரிய காசோலைகள் உரிய ஆட்களுக்கு அல்லது நிறுவனத்திற்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,417,500 பெறுமதியான 03 காசோலைகளும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 31,075 இற்காக திறந்த காசோலையொன்றுமாக ரூபா 1,448,575 தொகையான 4 காசோலைகள் சபையில் சேவையிலீடுபட்டிருந்த பதவியணியினரால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. |
| (iv) | நிதிப் பிரமாணம் 757(2) | ஏற்பாடுகளின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(v) நிதிப் பிரமாணம் 1179

ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தரொருவருக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் அவரின் மாதாந்த சம்பளத்திற்கு மேற்படக்கூடாத போதிலும் சபையின் உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளத்தை மிகைத்து கட்டணங்கள் மற்றும் லொத்தர் சீட்டிழுப்பு படிகள் கொடுப்பனவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. மீளாய்வாண்டில் அவ்வாறு மாதச் சம்பளத்தை மிகைத்து செலுத்தப்பட்டிருந்த படிகள் ரூபா 23,567,305 ஆக இருந்தது.

(ஊ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை

---

(i) 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ/1/ 2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவு

ஏற்பாடுகளின் பிரகாரம் தகைமை பெற்றுக் கொள்ளாதிருந்த 08 உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்காக ரூபா 1,471,440 ஆன எரிபொருள் படிகள் வழங்கப்பட்டிருந்தன.

(ii) 2015 யூன் 17 ஆந் திகதிய பீஈடீ/3/ 2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.5 ஆம் பிரிவு

ஏற்பாடுகளின் பிரகாரம் தலைவர், தொழிற்பாட்டு பணிப்பாளர் உட்பட பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்காக உரித்துடைய படிகள் தவிர வேறு எந்தவொரு படியொன்றும் செலுத்த முடியாதென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் தலைவர், தொழிற்பாட்டு பணிப்பாளர் உட்பட பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு சீட்டிழுப்பிற்காக பங்குபற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,142,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

---

### 3.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 507,046,703 ஆன மிகையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,783,386,637 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு நேரொத்த மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 1,276,349,934 தொகை அதாவது 72 சதவீத வீழ்ச்சி ஒன்றினைக் காட்டியது. 2001 முதல் 2009 ஆம் ஆண்டிற்கான மொத்த நிலுவை வருமான வரிப் பொறுப்பான ரூபா 1,208,002,376 தொகை 2017 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்தமை மேற்படி வீழ்ச்சி தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது ரூபா 2,126,428,341 ஆன 2013 ஆண்டின் மிகை 2015 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,727,063,739 வரை குறைவடைந்திருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 1,783,386,637 வரை அதிகரித்திருந்தது. எனினும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் 1,276,349,934 தொகை அதாவது 72 சதவீத வீழ்ச்சி ஒன்றினைக் காட்டியது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் அரசிற்கு செலுத்திய வரியை சீராக்கல் செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 3,086,604,130 ஆன பங்களிப்பு 2014 ஆண்டு வரை இடையறாது வளர்ச்சியடைந்திருந்தது. எனினும் 2016 ஆண்டின் போது ரூபா 721,228,361 தொகையால் அதாவது 23 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டின் போது மீண்டும் ரூபா 256,524,,904 ஆல் அதாவது 7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் சபையின் செயற்பாடுகள் இலாபகரத் தன்மை மற்றும் திரவத்தன்மை என்பவற்றைக் காட்டும் விகிதங்கள் மீதான பகுப்பாய்வு ஒன்று கீழே தரப்பட்டுள்ளன.

| **செயற்பாடு விகிதம்** | **2017** | **2016** |
|---|---|---|
| | **சதவீதம்** | **சதவீதம்** |
| விற்பனை விலைக்கு விற்பனை மற்றும் விநியோகச் செலவு | 25 | 24 |
| விற்பனை விலைக்கு விற்பனை கிரயம் | 58 | 58 |
| இலாபகரத் தன்மை விகிதம் | | |
| மொத்த இலாப விகிதம் | 42 | 42 |
| தேறிய இலாப விகிதம் (வரிக்கு முன்னர்) | 17 | 18 |
| தேறிய இலாப விகிதம் (வரிக்கு பின்னர்) | 3.6 | 12 |
| தேறிய இலாபத்திற்கு பரிசு உரித்தாக்கிய விகிதம் (வரிக்கு முன்னர்) | 13 | 10 |
| தேறிய இலாபத்திற்கு பரிசு உரித்தாக்கிய விகிதம் (வரிக்கு பின்னர்) | 59 | 16 |
| தேறிய இலாபத்திற்கு வருமான வரி விகிதம் (வரிக்கு முன்னர்) | 78 | 34 |
| தேறிய இலாபத்திற்கு வருமான வரி விகிதம் (வரிக்கு பன்னர்) | 358 | 51 |
| விற்பனை மற்றும் விநியோக செலவினம் மொத்த செலவினத்தின் சதவீதமாக | 89 | 90 |
| திரவத் தன்மை விகிதம் | | |
| நடைமுறை விகிதம் | 1:1:7 | 1:2 |
| விரைவு விகிதம் | 1:1:8 | 1:2 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் சபையினால் மேற்கொள்ளப்படும் விற்பனை மற்றும் விநியோகச் செலவினம், விற்பனை விலையிலிருந்து முறையே 24 சதவீதம் மற்றும் 25 சதவீதம் என்ற கூடிய அளவொன்றை எடுத்திருந்தது. மேலும் முன்னயை ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் சபையின் பாதிடப்பட்ட விற்பனை மற்றும் விநியோகச் செலவினத்தை விட உள்ளவாறான செலவினம் முறையே 411 சதவீதம் மற்றும் 353 சதவீதமான பாரியளவு அதிகரிப்பொன்றாகும். உள்ளவாறான விற்பனை மற்றும் விநியோகச் செலவினம் மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்களின் சதவீதமொன்றாக முறையே 90 மற்றும் 89 சதவீதமாக இருந்தது. இவ்வாறு அதிக செலவொன்றை செலவிடுவது சபைக்கு கிடைக்கும் தேறிய இலாபத்திற்கு நேரடியாக தாக்கமளிப்பதுடன் அது ஜனாதிபதி நிதியத்திற்கு மேற்கொள்ளும் பங்களிப்பிற்குப் பாதகமான வகையில் தாக்கத்தை ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையினால் மீளாய்வாண்டின் போது உழைக்கப்பட்டிருந்த வரிக்கு பின்னரான இலாபத்தில் 59 சதவீதம் வெற்றியாளர்களால் பெற்றுக் கொள்ளப்படாத பரிசுத் தொகைகளாக இருந்ததுடன் அது வரிக்கு முன்னரான இலாபத்தில் 13 சதவீதமாக இருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் வரிக்கு பின்னரான தேறிய இலாபத்தில் முறையே 51 சதவீதம் மற்றும் 358 சதவீதம் வருமான வரியாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது வரிக்கு முன்னரான இலாபத்தில் முறையே 34 சதவீதம் மற்றும் 78 சதவீதமாக இருந்தது. முன்னைய ஆண்டுகளின் போது அந்தந்த ஆண்டுகளில் உரிய செலுத்த வேண்டிய வருமான வரி சரியாக கொடுப்பனவு செய்யப்படாமை காரணமாக அந்நிலுவை வரியை தீர்வு செய்தமைக்கு நேர்ந்ததன் பேரில் மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் வரிக் கொடுப்பனவு தேறிய இலாபத்தின் சதவீதமொன்றாக கூடிய பெறுமதியொன்றை எடுத்திருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் ஆகஸ்ட் 30 ஆந் திகதி முதல் நாளாந்தம் சீட்டிழுப்பு இடம் பெறும் “அத கோடிபதி” புதிய லொத்தர் சீட்டினை ஒன்று சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் லொத்தர் விற்பனை வருமானம் ரூபா 778,374,934 ஆல் அதாவது 5.3 சதவீதத்தினால் குறைந்திருந்ததுடன் விற்பனை கிரயம் அதற்கு ஒப்பாக ரூபா 406,127,121 ஆல் அதாவது 4.8 சதவீதத்தினால் குறைவடைந்தமை மொத்த இலாப விகிதம் ஒரே மாதிரி இருப்பது தொடர்பில் தாக்கமளித்திருந்தது.

(உ) முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் நடைமுறை மற்றும் விரைவு விகிதம் 1.2 என சமமான பெறுமதியை எடுத்திருந்தது. அதன் பிரகாரம் சபையின் நடைமுறைச் சொத்துக்களை மிகைத்து நடைமுறை பொறுப்புக்கள் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டதால் மீளாய்வாண்டிலும் தொழில்படு மூலதனம் முகாமைத்துவம் தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்படவில்லையென்பது அவதானிக்கப்பட்டது.

**3.3 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருந்த சட்ட சம்பவங்கள்**

வெளி நிறுவனம் ஒன்றினால் வாகனமொன்றுக்கு ரூபா 8,095,000 செலுத்துமாறு கோரி வழக்கொன்றும் சபையின் ஊழியர் ஒருவரினால் மீண்டும் சேவையில் அமர்த்தும் படி கோரி வழக்கு ஒன்றும் என சபைக்கு எதிராக நீதிமன்றங்களில் 02 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றுகை**

**4.1.1. திட்டமிடல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 முதல் 2021 வரையான ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்த சபையின் கூட்டிணைந்த திட்டத்தில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2017 முதல் 2021 வரை அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நேக்கங்கள் மற்றும் இலக்குகளில் மதிப்பிடப்பட்ட அளவு, கிரயங்கள், காலப்பகுதியில் பொறுப்புக் கூற வேண்டிய முகாமைத்துவம் தொடர்பாக தகவல்கள் உல்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 5.1.3 பந்தியின் பிரகாரம் அடுத்த நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கூட்டிணைந்த திட்டத்தின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 யூன் 01 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(iii) மேற்படி சுற்றறிக்கையின் 9.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படும் போது நிறுவனத்தின் தேவைப்பாட்டின் பேரில் மனித வளத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் அது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டுகளின் போது கணக்காய்வினால் அது தொடர்பாக அறிவூட்டப்பட்ட போதிலும் அதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) கூட்டிணைந்த திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்த இலக்குகளுக்கு இடையே சனாதிபதி நிதியத்திற்கு கூடுதலாக பங்களிப்பு செய்வதாகும். 1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவுடன் சேர்த்து பிரகாரம் சபையின் பிரதான நோக்கமும் அதுவாகும். எவ்வாறாயினும் அந்த இலக்கை அடைந்து கொள்வதற்கு பின்பற்றப்பட்ட தந்திரோபாய திட்டம் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் செய்ற்படுத்துவதற்கு எதிர்க்கப்பட்ட இலக்குகள் அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மதிப்பிடப்பட்ட அளவுகள் மற்றும் கிரயம் உரிய காலப்பகுதியும் பாதிடப்பட்ட நிதி ஏற்பாடுகளும் உள்ளடக்கப்படும் வகையில் 2017 ஆம் ஆண்டிற்காக சபையினால் செயல்நடவடிக்கைத் திட்டம் விரிவாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் சபையின் கூட்டிணைந்த திட்டத்திற்கும் வருடாந்த பாதீட்டுடன் இணைந்த வகையில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்படாததுடன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயன் முன்னேற்றம் காலரீதியாக பரீட்சிப்பதற்காக பொருத்தமான நடைமுறையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

(அ) லொத்தர் விற்பனை மற்றும் விற்பனையிலிருந்து கிடைக்கும் நிதி சனாதிபதி நிதியத்திற்கு அனுப்புவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் சபையினால் நடாத்தப்பட்ட 10 லொத்தர்களுக்காக 1190 சீட்டிழுப்புக்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன், லொத்தர் விற்பனை மூலம் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 32,891,204 ஆக இருந்தது. அவ்வாறே ஆண்டினுள் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் ரூபா 7,263,436,665 தொகை பரிசுகளாக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் லொத்தர் விற்பனை வருமானத்தில் ரூபா 376,145,499 தொகையும் ஏனைய வருமானங்களிலிருந்து ரூபா 376,145,499 தொகை உட்பட சனாதிபதி நிதியத்திற்காக அனுப்பிய தொகை ரூபா 507,036,703 அதாவது 3.6 சதவீதமாக இருந்தது.

(ii) தஷ லக்ஷபதி லொத்தரிலிருந்து எவ்வித தொகையொன்றும் ஜனாதிபதி நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்படாதிருந்ததுடன் எஞ்சிய 9 லொத்தர்களுக்கான அனுப்பிய தொகை ஒவ்வொரு லொத்தர்களுக்காக சேகரிக்கப்பட வருமானத்திலிருந்து 0.98 சதவீதம் முதல் 5.6 சதவீதத்திற்கு இடையே மிகவும் சிறிய வீச்சொன்றாக இருந்தது.

(iii) வருமானங்களை சேகரிப்பதற்காக சபையினால் மீளாய்வாண்டில் ரூபா 12,078,580,888 ஆன கிரயமொன்று செலவிடப்பட்டிருந்ததுடன் அக்கிரயத்தில் 3.2 சதவீதமான ரூபா 386,509,683 தொகை விளம்பர செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டிருந்தது.

(iv) சபையினால் லொத்தர் விற்பனையால் கிடைக்கும் வருமானத்திலிருந்து 50 சதவீதம் பரிசுகளுக்காக ஒதுக்கப்படுகின்றது. மீளாய்வாண்டில் 172,507,676 பரிசு பெற்றோருக்கு ரூபா 6,920,946,975 பரிசுகளாக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 3 சதவீத அதிகரிப்பொன்றாக இருந்தது. மேலும் மீளாய்வாண்டினுள் வெற்றியாளர்களினால் 06 மாத காலம் கடந்ததன் பேரில் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த ரூபா 297,376,550 பெறுமதியான பரிசுத் தொகை குறித்த வெற்றியாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் லொத்தர் சீட்டு விற்பனைக்காக செலவிடப்பட்ட விளம்பர கிரயத்திற்கு ஒப்பாக பெற்றுக்கொண்ட விற்பனை வருமானத்தின் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சனிக்கிழமை அதிஷ்டம், லக்கின அதிர்ஷ்டம் மற்றும் சுபர் போல் லொத்தர்களின் விளம்பரக் கிரயம் முறையே 34 சதவீதத்தினாலும் 2.6 சதவீதத்தினாலும் 6.5 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்த போதிலும் விற்பனை வருமானம் முறையே 8.5 சதவீதத்தினாலும் 26 சதவீதத்தினாலும் 27 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்திருந்தது.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கலெக்சி ஸ்டார் மற்றும் லக்ஷபதி லொத்தர் சீட்டுக்களின் விளம்பரக் கிரயம் முறையே 9 சதவீதத்தினாலும் 11 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்ததுடன் அதன் விற்பனை வருமானம் முறையே 34 சதவீதத்தினாலும் 50 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தன.

(iii) கலெக்சி ஸ்டார் மற்றும் தஷ லக்ஷபத்தி லொத்தர் சீட்டுக்கள் விற்பனை வருமானம் முறையே 3.4 சதவீதம் மற்றும் 9 சதவீதம் விளம்பர செலவினமாக செலவிடபட்டிருந்ததுடன் ஏனைய லொத்தர் சீட்டுக்களின் விளம்பர செலவினம் விற்பனை வருமானத்தின் 2 சதவீதமாக இருந்தது.

(iv) கோடிபதி லொத்தர் சீட்டின் விளம்பரச் செலவினம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது 0.27 சதவீதத்தினால் குறைவடைந்திருந்த போதிலும் விற்பனை வருமானம் 34 ஆல் அதிகரித்திருந்தன.

(இ) சனாதிபதி நிதியத்திற்கு 2014 ஆம் ஆண்டின் போது அனுப்பி வைக்கப்பட்ட தேறிய இலாபம் ரூபா 2,353 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது ரூபா 507 மில்லியனாக இருந்தமையால் அந்நிதியத்திற்கு அனுப்புதல் 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக 19.17 சதவீதத்திலிருந்து 3.6 சதவீத வரை 81 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டினுள் முன்னைய ஆண்டிலும் உள்ள நிலுவை வரிகளை தீர்த்து வைத்தமை இந்நிலைமைக்கு காரணமாக இருந்தது.

| | ஆண்டு | | | |
|---|---|---|---|---|
| | **2017** | **2016** | **2015** | **2014** |
| | --------- | --------- | --------- | --------- |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| விற்பனை வருமானம் | 13,981,500,306 | 14,759,875,240 | 11,874,659,603 | 12,271,477,490 |
| வரி கழிக்கப்பட்ட இலாபம் | 507,036,703 | 1,783,386,637 | 1,727,063,739 | 2,353,246,338 |
| வரி கழிக்கப்பட்ட வருமானம் விற்பனைகளின் சதவீதமாக | 3.6 | 12.08 | 14.54 | 19.17 |

(ஈ) 2016 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2017 ஆம் ஆண்டில் சபையினால் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இரண்டு லொத்தர் சீட்டுக்கள் தவிர ஏனைய சகல லொத்தர் சீட்டுக்களில் விற்பனை தெளிவான வகையில் குறைவொன்று அவதானிக்கப்பட்டதுடன் சபை ஒட்டு மொத்த லொத்தர் விற்பனை 2016 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 685 மில்லியனால் குறைவடைந்திருந்தது. லொத்தர் விற்பனை வீழ்ச்சி 8.5 சதவீதத்திலிருந்து 50.4 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் பரவியிருந்ததுடன் 05 லொத்தர் சீட்டுக்களின் விற்பனை 25 சதவீதத்தை விட கூடிய பெறுமதியில் வீழ்ச்சியடைந்திருந்தது.

(உ) 2016 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போதும் ஒவ்வொரு லொத்தர் சீட்டுக்குரிய லொத்தர் சீட்டிழுப்பு செலவினம் அதிகரித்திருந்தது. அவ்வதிகரிப்பிற்கு இடையே சனிக்கிழமை அதிர்ஷ்டம், அபிவிருத்தி லக்ஷபதி மற்றும் கோடிபதி சனிதா ஆகிய 3 மூன்று லொத்தர் சீட்டுக்குரிய செலவினம் முறையே 36 சதவீதம் 49 சதவீதம் 94 சதவீதத்தில் அதிகரித்திருந்தமை அவதனிக்கப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் களஞ்சிய தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக 2014 ஆம் ஆண்டின் போது கூறுவிலை கோரி ரூபா 14.5 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதிக்கு Premedare கம்பனியுடன் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும் அந்த ஒப்பந்தம் மீறப்பட்டு 2015 மார்ச் 12 ஆந் திகதி ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டதாக தலைவரால் வாடிக்கையாளருக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் ஒப்பந்தக்காரருக்கு 2017 மார்ச் 07 ஆந் திகதி அதற்காக செலவிட்ட ரூபா 2,500,000 ஐ இழப்பீட்டு தொகை (Amicable Settelment) கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானம் காரணமாக பதியுரைக் கட்டணம் ரூபா 996,501 தொகையும் நடுவர் கட்டணம் ரூபா 40,000 உடன் ரூபா 3,336,501 ஆன நட்டமொன்றை சபை ஏற்றுக்கொள்ள நேர்ந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் போது போக்குவரத்து உத்தியோகத்தர் பதவிக்காக முறையற்ற வகையில் வழங்கப்பட்ட நியமனம் சட்டரீதியானதல்ல எனக் குறிப்பிடப்பட்டு அந்த உத்தியோகத்தர் சேவையிலிருந்து நீக்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தரால் 2015 மே 19 ஆந் திகதி மீண்டும் சேவையில் நியமிக்கும் படி கோரி வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன் அது நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. எவ்வாறாயினும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதற்காக செலவிடப்பட்ட சட்டத்தரணிகள் கட்டணம் ரூபா 854,000 ஆக இருந்ததுடன் அது சபையின் உயர்மட்ட முகாமைத்துவத்தினால் முறையாக ஆட்சேர்ப்பு செய்யப்படாயைால் சபைக்கு செலவிட நேர்ந்த செலவினமொன்றாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) 2016 மே 17 ஆந் திகதி சீட்டிழுப்பு நடைபெற்ற 402 ஆவது சீட்டிழுப்பின் போது சுபர் பரிசு பொதியான ரூபா 10,441,580 இற்குரிய லொத்தர் சீட்டிற்காக அதன் அச்சீட்டாளராள Digican நிறுவனத்தின் ஊழியரொருவரால் போலியான லொத்தர்சீட்டு அச்சிடப்பட்டிருந்தது. அந்நிறுவனத்துடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் மென்பொருள் மீதான தவறொன்று அல்லது மோசடியொன்று இடம்பெற்றால் ரூபா 500,000 ஆன இழப்பீட்டுத் தொகையொன்று அறவிடப்பட வேண்டிய போதிலும் அதற்காக இழப்பீட்டுத் தொகையொன்றையும் அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கையொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) படிகள் பகிந்தளித்தல் முரண்பாடொன்று காரணமாக மீளாய்வாண்டில் 251 உத்தியோகத்தர்களுக்கு இடைய கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 113,505,364 தொகையான நானாவித கொடுப்பனவு வகைகளில் மொத்த படிகளின் பெறுமதியில் 21 சதவீதம் அதாவது ரூபா 26,456,847 ஆன படிகள் 22 உத்தியோகத்தர்களுக்கு இடையே பகிரப்பட்டிருந்தன இந்நிலைமை பிரதானமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் மீளாய்வாண்டில் சீட்டிழுப்பு மேற்கொள்ளும் செலவினம் ரூபா 32,423,800 இல் ரூபா 13,670,850 அதாவது 42 சதவீதம் பணிப்பாளர் சபையின் உத்தியோகத்தர் உட்பட மேல்மட்ட முாகாமைத்துவத்தின் 23 பேருக்கு உரித்தாகியிருந்தமை தாக்கமளித்திருந்தது.

## 4.3 தொழிற்பாட்டு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உடனடி லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்வதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் ஒன்று இல்லாமல் சபையினால் 08 வேன் வண்டிகள் நடமாடும் வண்டிகளாக பயன்படுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் நடமாடும் வண்டியொன்று மூலம் லொத்தர் விற்பனையின் போது ஒரு டிக்கட்டிற்காக ரூபா 7.07 செலவினமொன்று செலவிடப்பட்ட போதிலும் விற்பனை முகவர் மூலம் விற்பனை யெ்யும் போது இடம்பெற்ற செலவினம் ரூபா 2.67 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நடமாடும் வண்டிகள் மூலம் உடனடிக் கட்களை விற்பனை செய்த காரணத்தினால் அந்த டிக்கட்கட் ஒன்றுக்காக ரூபா 4.40 வீதம் 2,202,300 இற்காக ரூபா 9,690,120 ஆன மேலதிக கிரயமொன்று செலவிட நேர்ந்திருந்தது. எவ்வாறாயினும் இத்தீர்மானம் மேம்படுத்தல் நடவடிக்கையொன்றாக போட்டிக்கு முகங் கொடுப்பதற்கு என திர்மானம் எடுத்ததாக சபையினால் அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதி செயற்படுத்தப்பட்டதன் பிரகாரம் "அத கோடிபதி" பெயரில் லொத்தர் சீட்டுச் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இந்த புதிய டிக்கட்டின் விற்பனையை மேம்படுத்துவதற்கு விநியோக முகவர்களுக்கு விஷேட படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 25,813,683 உட்பட விற்பனை முகவர் தரகு மற்றும் விநியோக தரகாக ரூபா 279,496,493 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஏனைய சகல டிக்கட்களின் விற்பனை

வீழ்ச்சியடைந்திருந்ததுடன் அதன் பிரகாரம் புதிய லொத்தர் சீட்டு அறிமுகப்படுத்தும் போது சந்தை போட்டி நிலைமை மற்றும் நுகர்வோர் நடத்தை தொடர்பான ஆய்வினை மேற்கொண்டுள்ளதாக அவதானிக்கப்படவில்லை. 2017 ஒக்தோபர் முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரை சகல விற்பனை செய்யப்படாத எஞ்சிய லொத்தர்களின் எண்ணிக்கை 32.5 மில்லியனாக இருந்ததுடன் அவற்றின் அச்சீட்டுக் கிரயம் 14.5 மில்லியனுக்கு அண்மித்தது.

(இ) வருடாந்த வகைப்படுத்தல் அறிக்கையின் பிரகாரம் சபையினால் செயற்படுத்தபடும் 08 வகை லொத்தர்கள் மற்றும் உடனடி லொத்தர்களின் ஒவ்வொரு வகையான லொத்தர் வெவ்வேறாக கணக்கிடப்பட்ட வரிக்கு முன் இலாபம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது 31 சதவீதம் மற்றும் 85 சதவீதத்தினால வீழ்ச்சியடைந்திருந்தது மீளாய்வாண்டின் போது கடந்த ஆண்டிற்கு ஒப்பாக அவ்வாறு வீழ்ச்சியடைந்திருந்த மொத்த வரிக்கு முன் இலாபம் ரூபா 2,950,124,301 ஆக இருந்தது.

(ஈ) 2017 மார்ச் 23 ஆந் திகதி நடைபெற்ற விற்பனை முகவர்களின் நிதி இயலுமையை அதிகரிக்கும் நோக்கில் நடாத்தப்பட்ட இணக்கத்தின் பிரகாரம் 22 முகவர்களால் வங்கி பிணை முறியாக ரூபா 12.2 மில்லியன் தொகை வைப்புச் செய்வதை தவிர்ப்புச் செய்திருந்தனர்.

மேலும் மீளாய்வாண்டில் விநியோகஸ்தர்களுக்கு ரூபா 108 மில்லியன் பெறுமதியான லொத்தர் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவற்றை அறவிடுவதற்கு போதியளவு பிணை வைப்பு சபையிடம் இல்லாதிருந்தமையால் வியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் ஆபத்து ரூபா 105 மில்லியனாக இருந்தது இதன் பிரகாரம் கடனுக்கு வழங்கப்படும் லொத்தர் சீட்டுக்களுக்குரிய ஆபத்தை குறைப்பதற்கு மேற்குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அந்நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டினுள் சீட்டிழுப்பு நடாத்தப்பட்ட 800,940,150 சீட்டுக்களை அச்சிடுவதற்காக ரூபா 346,417,188 ஆன அச்சீட்டு செலவினமொன்று செலவிடப்பட்டிருந்ததுடன் சட்ட விதிகள், நுகர்வோர் நடத்தை, ஒவ்வொரு லொத்தர் சீட்டுக்களின் நலன் கட்டமைப்பு ஊடாக நுகர்வோருக்கு ஏற்படும் தாக்கம் போன்ற விடயங்கள் உட்பட ஒட்டு மொத்த சந்தை எதிர்வு கூறல் கருத்திற்கொள்ளப்படாமல் லொத்தர் சீட்டுக்கள் அச்சிடப்பட்டிருந்தன. அதன் காரணமாக மீளாய்வாண்டில் அச்சிட்டு செலவினம் ரூபா 51,748,146 தொகையான 119,656,730 ஆன லொத்தர் சீட்டுக்கள் விற்பனை செய்யப்படாமல் எஞ்சியிருந்ததுடன் இச்செலவினம் பயனற்ற செலவினமாக இருந்தது.

### 4.4. சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாகனங்களுக்கு எரிபொருள் வழங்குவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது எரிபொருள் தாங்கியின் இயலளவினை மிகைத்து 13 சந்தர்ப்பங்களின் போது ரூபா 10,678 பெறுமதியான 112 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. எரிபொருள் தாங்கியின் இயலளவினை மிகைத்து வழங்கப்பட்ட முறை காணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய விடயமொன்றாக இருந்தது.

(ஆ) விற்பனை மேம்படுத்தல் உருப்படிகள் (குடை மற்றும் மக்) என்பவற்றிற்காக சபையின் பதிவு செய்யப்பட்ட வழங்குனரர் ஒருவரால் 2017 யூன் 22 ஆந் திகதி கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. உரிய வழங்குனரால் குறிப்பிடப்பட்டிருந்த முகவரியின் சரியாதன்மையை உறுதிப்படுத்தப்படாதிருந்ததுடன் அதில் தொலைபேசி இலக்கம் எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வினால் பௌதீக ரீதியாக பரிட்சித்த போது இவ்வாறான முகவரியொன்றோ அல்லது நிறுவனமொன்றோ இல்லையென அவதானிக்கப்பட்டது.

2016 திசெம்பர் 20 ஆந் திகதி விற்பனை மேம்படுத்தல் உருப்படிகள் கொள்வனவு செய்யப்படும் சந்தர்ப்பத்தின் போது மேற்குறித்த வழங்குனரால் கந்துரட்ட குடை நிறுவனத்தின் பிரதேச முகாமையாளர் ஒருவராக (Area Manager) தோன்றி கந்துரட்ட குடை நிறுவனத்தின் கடித தலைப்புக்களைப் பயன்படுத்தி கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அவ்வாறான பிரதேச முகாமையாளர் அந்நிறுவனத்தில் இல்லையெனவும் அக் கடித தலைப்புக்கள் அவர்களின் கடிதத் தலைப்பு அல்ல எனவும் மேற்குறித்த முகவரியில் எந்தவொரு கிளையொன்றும் இல்லையெனவும் அந்நிறுவனத்தினால் கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

மேலும் இந்நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கடிதங்களும் நிழற்பட பிரதிகள் ஆக இருந்ததுடன் மூலப் பிரதிகள் எத்தகைய ஒரு சந்தர்ப்பத்திலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை மேலும் சமர்ப்பிக்கப்பட்ட கடிதங்களில் உள்ள கையொப்பம் ஒன்றுக்கு ஒன்று வேறுபட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இவ்வாறான போலியான நிறுவனமொன்றிடமிருந்து 2017 ஆம் ஆண்டில் ரூபா 1,905,230 ஆன விற்பனை மேம்படுத்தல் உபகரணங்கள் கொள்வனவு செய்தமை சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கலொன்றாக இருந்தது.

(இ) உடனடி லொத்தர் சீட்டுக்கள் வகைகளுக்கு இடையே Y – 144 (B பகுதி) 2017 மார்ச் 29 ஆந் திகதி சந்தைக்கு வழங்குமாறும் அச்சந்தர்ப்பத்திலேயே ஒரு பெட்டியில் 25 குடைகள் வீதம் இட்டு 100 பெட்டிகளை வழங்குமாறு சந்தைப்படுத்தல் பிரிவினால் களஞ்சியத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் களஞ்சியத்தின் உடனடி டிக்கட் இருப்பு பதிவேட்டின் பிரகாரம் (Y/144-(B)) இந்த உடனடி டிக்கட் இருப்பு 2017 பெப்ரவரி 28 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. மேலும் டிக்கட்கள் வழங்கப்பட்ட சரியான திகதி, விநியோகிக்கப்பட்ட குடைகளின் அளவு மற்றும் பகிர்ந்தளிக்கும் பதிவேடு போன்ற தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை எவ்வாறாயினும் பிரதான களஞ்சியத்தில் காணப்பட்ட டிக்கட் இருப்பு 2017 பெப்ரவரி 28 ஆந் திகதி உபகளஞ்சியங்களுக்கு மாற்றப்பட்டதாக சபையினால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

## 4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மேலும் 04 ஆண்டுகள் உத்தரவாத காலம் எஞ்சி காணப்பட்ட 03 மோட்டார் சைக்கில்கள் உட்பட ஓட்டநிலைமையில் காணப்பட்ட ரூபா 3,405,757 பெறுமதியான 19 மோட்டார் சைக்கில்கள் 02 மாதங்கள் 2 1/2 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கையில் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ஓராண்டிற்கு 6 மோட்டார் சைக்கில்கள் வீதம் ரூபா 2,892,999 தொகையான 12 மோட்டார் சைக்கில்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 58,355,403 ஆன இருப்பு மீதியில் ரூபா 1,594,664 தொகையான பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத இருப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

## 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2008 ஆண்டின் போது முகவர் நிறுவனமொன்றிடமிருந்து ரூபா 8,095,000 பெறுமதியான கெப் வண்டியொன்று சபையின் எந்தவொரு உத்தியோகத்தரிடமிருந்து அங்கீகாரமொன்று இல்லாமல் அப்போதிருந்த தலைவரால் சபையின் பெயரில் பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் அத்திகதி முதல் இவ்வாகனம் காணாமல் போயிருந்தது. குறித்த கம்பனிக்கு இதுவரை பணம் செலுத்தப்படாததன் பேரில் அக்கம்பனியால் தொடரப்பட்டிருந்த வழக்கிற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சபையினால் ரூபா 2,244,685 சட்டத்தரணிக் கட்டணம் செலவிடப்பட்டிருந்ததுடன் குறித்த சொத்தினை இதுவரை பெற்றுக்கொள்ள சபைக்கு முடியாதிருந்தது. எனினும் அவ்வண்டியின் பெறுமதி 2013 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களாக காண்பிக்கப்பட்டு வருடாந்தம் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன் 2013 ஆண்டு முதல் இவ்வறிக்கை திகதி வரை சனாதிபதி நிதியத்திற்கு இழக்கப்பட்ட பங்களிப்புத் தொகை ரூபா 10,339,635 ஆக இருந்தது.

(ஆ) விற்பனை மேம்படுத்தல் உருப்படியாக 2009 ஆம் ஆண்டின் போது சதேச நிறுவனத்திடமிருந்து ரூபா 590,500 பெறுமதியான 121 பரிசூதிய சீட்டுக்கள் மற்றும் 2013 பெப்வரி 18 ஆந் திகதி எஸ்ரீசீ நிறுவனத்திடமிருந்து ரூபா 100,000 பெறுமதியான பொருட்கள் காலாவதியான 32 பரிசூதிய சீட்டுக்களும் ரூபா 690,500 பெறுமதியான பரிசூதிய சீட்டுக்களும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் காப்பறையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. 2017 யூன் 12 ஆந் திகதி இந்த உறுதிச்சீட்டுக்களை மீண்டும் புதுப்பிப்பதற்காக அந்நிறுவனங்களிலிருந்து விசாரிக்கப்பட்டிருந்த போதும் அதற்கு இணக்கப்பாடு தெரிவிக்கப்படாமையால் இது சபைக்கு பயனற்ற செலவினமொன்றாக இருந்தது. எனினும் இச்செலவினம் மேலும் விற்பனை மேம்படுத்தல் உருப்படியொன்றாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 4.7 முறையாக விதமாக உரித்தாக்கப்படாத காணிகள் / ஆதனங்களில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்

திஸ்ஸமஹாராமை பிரதேச செயலகப் பிரிவிற்கு உரித்தான 01 ஏக்கர் அளவிலான காணி திஸ்ஸமஹாராமை பிரதேச செயலகத்திடமிருந்து நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு இணங்கியிருந்த போதிலும் முறையான குத்தகை ஒப்பந்தமொன்றுக்கு வராமல் சுற்றுலா விடுதி ஒன்று நிர்மாணிப்பதற்காக அக்காணியின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 492,392 தொகை சபையினால் செலவிடப்பட்டிருந்தது.

## 4.8 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த சபையின் சொத்துக்கள்

2003 ஜூன் 02 திகதிய பீஈடி/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 பிரிவின் பிரகாரம் வரிசை அமைச்சு அல்லது வேறு அரச நிறுவனங்களுக்காக சபையின் வளங்கள் விடுவிக்க முடியாது எனினும், சபையின் பதவியணிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 11 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட திகதி முதல் ஊடக அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். இப்பதவியணியினர் சபையின் நடவடிக்கைகளுக்காக எவ்வித பங்களிப்பொன்றையும் வழங்காதிருந்த போதிலும் சபை நிதியத்திலிருந்து ஊழியர் ஊதியமாக 2016 மற்றும் 2017 யூன் 19 ஆந் திகதி வரை முறையே ரூபா 3,376,415 மற்றும் ரூபா 3,725,000 என மொத்தம் ரூபா 7,101,415 செலுத்தப்பட்டிருந்தது.

**4.9 பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணியினர் 269 ஆக இருந்ததுடன் உள்ளவாறான பதவியணியினர் 289 ஆக இருந்தது. அதில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 21 ஆக காணப்பட்டதுடன் மிகையாகக் காணப்பட்ட பதவியணியினர் 39 ஆக இருந்தது. கடமை பொறுப்புக்களை இனங்கண்டு அதற்கு இணங்கும் வகையில் சபையின் அத்தியவசிய பதவிகளுக்காக ஆட்சேர்க்கப்படாமை, அவசியமற்ற பதவிகளுக்காக வரையை மிகைத்து ஆட்சேர்ப்பு செய்யப்பட்டமை வெற்றிடங்கள் மற்றும் மிகைகளுக்கான காரணமாக இருந்தது.

(ஆ) 2006 இன் 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் 2015 திசெம்பர் 16 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறையின் பிரகாரம் பதவியணியினர் ஆட்சேர்ப்பு நடைமுறை "நிறுவன பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படுவதன் பிரகாரம் பத்திரிகை விளம்பரமொன்றோ அல்லது பகிரங்க அறிவித்தலொன்று மூலம் விண்ணப்பங்கள் கோரி எழுத்துமூல போட்டிப் பரீட்சையொன்று மற்றும் / அல்லது நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படுகின்ற சபை மூலம் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சையொன்றின் பெறுபேற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படல் வேண்டும். எனினும் 2017 ஆம் ஆண்டினுள் ஆட்சேர்ப்பின் போது பகிரங்க அறிவித்தலொன்று அல்லது பத்திரிகை விளம்பரமொன்று மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கவில்லை.

(இ) கணக்காய்வு திகதியான 2018 யூலை 30 ஆந் திகதி வரை உதவி பொது முகாமயாளர் (பெறுகை) நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 386,847,211 பெறுமதியான பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் ஆலோசணைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 60,000 மற்றும் ரூபா 22,104 வீதமான மாதாந்த சம்பளத்திற்கு பொதுசன கூட்டமைப்பு உத்தியோகத்தர்களும், தனிப்பட்ட உதவியாளராக ரூபா 30,000 மாதாந்த சம்பளத்திற்கு 70 வயதான உத்தியோகத்தரொருவரும் ரூபா 60,000 சம்பளத்திற்கு மேலுமொரு உத்தியோகத்தரும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவிஉயர்வு நடைமுறை அங்கீகரிக்கப்படாமல் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.

(உ) 60 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போது அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் பிரத்தியேக உதவியாளர், சாரதிகள், முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் விற்பனை மதிரையாளர் ஆகிய பதவிகளுக்காக முறையே ரூபா 30,000, ரூபா 25,918, ரூபா 50,000 மற்றும் ரூபா 100,000 ஆன மாதக் கொடுப்பனவு இணக்கப்பாட்டின் பேரில் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஊ) (ஈ) மற்றும் (உ) பந்திகளில் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைக்காமல் இருந்ததுடன் முறையான நடைமுறையொன்று பின்பற்றப்படாமல் ஒரே பதவிக்காக கூடிய முரண்பாடுகளுடன் படிகள் செலுத்தி ஆட்சேர்ப்பு இடம்பெற்றுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

(எ) சபையினால் விற்பனை செய்யப்படுகின்ற லொத்தர்களின் விற்பனை இலக்கை பூர்த்தி செய்வதற்கு உதவிபுரிதல் மற்றும் விற்பனை கூடங்களைப் பரீட்சிப்பதற்காக சகல மாவட்டங்களையும் மேவுகை செய்யும் வகையில் 18 வெளிக்கள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களால் ஒவ்வொரு மாதமும் முன்கூட்டிய நிகழ்ச்சித்திட்டமொன்று (Advance Programme) சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் அவர்கள் கடமையை நிறைவேற்றுகின்றார்களா என GPS தொழில்நுட்பத்தின் மூலம் மேற்பார்வை செய்வதற்காக 04 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான மேற்பார்வையொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

(ஏ) 2017 மார்ச் 24 ஆந் திகதி முதல் ஒப்பந்த அடிப்படையில் சாரதியொருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுடிருந்ததுடன் செப்தம்பர் 20 ஆந் திகதி சேவை முடிவுறுத்தப்பட்டிருந்தது. இந்த ஊழியர் சபையில் சேவை புரிந்த 06 மாத காலப்பகுதியில் சபையின் செயற்பாடுகளுக்கு எவ்வித பங்களிப்பு வழங்கப்படாதிருந்த போதும் சம்பளம், மேலதிகநேர வேலை, ஊக்குவிப்பு படிகள் மற்றும் வருகை படி என ரூபா 279,744 தொகை சபையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) முறையான உடன்படிக்கையொன்றுக்கு வராமல் சீட்டிழுப்பு செயற்பாட்டை மேற்கொள்வதற்காக தனியார் நிறுவனமொன்றின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக 2014 ஆம் ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 104,716,157 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இச்செயற்பாட்டிற்காக உதவிபொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்) பதவியொன்றும் பதவியணியில் 03 பேருடன் பிரிவொன்றும் தாபிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளக ரீதியாக நிறைவேற்றக்கூடிய இயலுமை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 782,817 ஆக காணப்பட்ட ஒரு ஊழியருக்கான கிரயம் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 948,218 ஆக இருந்தமை ரூபா 165,401 இனால் அல்லது 21 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 4.10 வாகனப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 10,098,026 கிரயத்திலான ஹைவுன்டாய் வகையான ஆடம்பர மோட்டார் வண்டியை கைதவிர்ப்பதற்காக 2015 நவம்பர் 15 ஆந் திகதி திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாகனம் 2015 நவம்பர் 01 ஆந் திகதி முதல் 2016 திசெம்பர் 16 ஆந் திகதி வரை எவ்வித தொழில்நுட்ப தவறொன்றுமில்லாமல் குழாம் வாகனமொன்றாக சபையின் மேல்மட்ட முகாமைத்துவத்தின் தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. கைதவிர்ப்பதற்காக அப்போது போதியளவு காரணங்கள் இல்லையென கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பின்னர் இந்த வாகனம் முறையான கவனம் இன்றி பயன்படுத்தப்பட்ட காரணத்தினால் கியர் முறைமைக்கு ரூபா 852,755 ஆன திருத்த செலவினமொன்று அல்லது ரூபா 1,167,637 ஆன புதிய கியர் பெட்டியொன்றை பொருத்தும் செலவினமொன்று வாகன முகவர் நிறுவனத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அத்திகதி முதல் 2 ½ ஆண்டுகள் வாகனத்தினை திருத்துவதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் பாதுகாப்பற்ற விதத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இவ்விடயம் தொடர்பாக கணக்காய்வினால் தொடர்ந்தும் சுட்டிக்காட்டப்பட்ட காரணத்தினால் ரூபா 396,900 செலவினம் மேற்கொண்டு இவ்வாகனம் திருத்தம் செய்யப்பட்டு 2018 ஒக்தோபர் 03 ஆந் திகதி மீண்டும் சபையின் வாகன குழாமிற்கு சேர்க்கப்பட்டமையால் ரூபா 5,000,000 இற்கு மேற்பட்ட சந்தைப் பெறுமதியொன்று சபைக்கு சேர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) 2001 செப்தம்பர் 14 ஆந் திகதி ரூபா 1,425,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த வாகனமொன்று 2017 மார்ச் மாதம் முதல் குழாம் வாகனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருந்தது. 2016 ஏப்ரல் 20 ஆந் திகதி 14 வேலை பகுதிகளுக்காக ரூபா 239,749 ஆன மதிப்பீட்டில் 06 வேலைப்பகுதிகளும் 2016 யூன் 15 ஆந் திகதி ரூபா 92,139 மதிப்பீட்டுடன் ரூபா 26,927 ஆன கிரயத்துடன் கூடிய வேலைப்பகுதிகள் மாத்திரம் திருத்தம் செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் காணப்பட்ட தவறுகளை முறையாக திருத்தம் செய்யப்படாமல் ஒரு பகுதி மாத்திரம் திருத்தம் செய்யப்பட்ட இவ்வாகனம் 2018 ஏப்ரல் 05 ஆந் திகதி கைதவிர்க்கப்பட்டிருந்தது.

(இ) 1999 மே 24 ஆந் திகதி ரூபா 2,943,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட வாகனமொன்று திருத்த வேலைகளுக்கு தனியார் நிறுவனமொன்றிலிருந்து மாத்திரம் மேற்கொண்டிருந்ததுடன் 2016 ஒக்தோபர் 17 ஆந் திகதி மாத்திரம் திருத்த வேலைகளுக்காக முகவர் நிறுவனமொன்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டதன் பின்னர் ரூபா 1,901,864 ஆன மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அச்சந்தர்ப்பத்தின் போது மாத்திரம் விற்பனை முகவர் கம்பனியிடமிருந்து பெற்றுக்கொண்ட விலை அடிப்படையில் பொருளாதார நலனொன்று இல்லாத போக்குவரத்து மதியுரையாளரின் பரிந்துரையின் பேரில் வாகனம் கைதவிர்ப்பு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மேற்படி (ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்ட வாகனங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி முறையே ரூபா 1,200,000 மற்றும் ரூபா 2,500,000 ஆக இருந்ததுடன் அதன் விற்பனை பெறமதி ரூபா 1,850,000 மற்றும் ரூபா 3,550,000 (கூடிய கேள்வி ரூபா 3,650,000) ஆக இருந்தமையால் அவ்வாகனம் மதிப்பிடப்பட்ட பெறுமதியை விட 54 சதவீதத்தினாலும் 42 சதவீதத்தினாலும் கூடுதலாக விற்பனை செய்யப்பட்டிருந்தது. இவ்வாகனங்களுக்காக வழங்கப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாக இருந்தது.

(உ) தனியார் நிறுவனமொன்றிடமிருந்து வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக்கொள்வதற்கு நேர்ந்தமையால் சபைக்கு அதிகளவு வாகன கிரயமொன்று மேற்கொள்வதற்கு நேர்ந்திருந்தது. எனினும் 2017 ஆம் ஆண்டில் வாடகை அடிப்படையில் 4 வாகனங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 9,495,518 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஊ) சபைக்குரிய 8 வேன் வண்டிகள் உடனடி லொத்தர் சீட்டு விற்பனைக்காக நடமாடும் வண்டிகளாக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அவ்வாகனங்கள் சாரதிகளுக்கு முறையாக கையளிக்காமை, விற்பனை மேற்கொள்ளப்படும் இடங்கள் தொடர்பாக தொழில்நுட்பம் ஊடாக அவதானித்தல், இராக்காலங்களில் விற்பனை உத்தியோகத்தர்கள் அல்லது விற்பனை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் பொறுப்பில் வாகனத்தை வைத்துக்கொள்ளல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டிய போதிலும் அச்செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் 11 மோட்டார் சைக்கில்கள் தொடர்பாக முகவர் கம்பனிகள் குறிப்பிடப்பட்டிருந்ததன் பிரகாரம் ஒரு லீற்றர் எரிபொருளினால் ஓட்டத்தில் ஈடுபடக்கூடிய தூரம் 65 இற்கும் 70 இற்கும் இடைப்பட்ட கிலோமீற்றர்களாகும். எனினும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஒரு லீற்றர் எரிபொருளுக்கு 35 கிலோமீற்றர் மாத்திரம் ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியுமென குறிப்பிட்டு எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2018 ஏப்ரல் 23 ஆந் திகதி வரை 11 மோட்டார் சைக்கில்கள் ஓட்டத்தில் ஈடுபட்டிருந்த முழுத் தூர அளவு 293,312 ஆக இருந்ததுடன் பயன்படுத்தியிருந்த எரிபொருள் அளவு 8281 கிலோமீற்றர்களாகும். எனினும் முகவர் கம்பனி குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் அதற்காக செலவிடப்படும் எரிபொருள் அளவு 4512 லீற்றர் ஆக இருந்தமையால் 3769 லீற்றர்களுக்காக ரூபா 440,915 ஆன மிகை எரிபொருள் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 4.13 சந்தையின் பங்கு

அரச சார்பாக லொத்தர்கள் நடத்துவதற்காக நிறுவப்பட்டுள்ள தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை ஆகியவற்றினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் போது லொத்தர் விற்பனைக்காக அளித்துள்ள பங்களிப்பு தொடர்பாக விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | லொத்தர் விற்பனை வருமானம் | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தி லொத்தர் சபை | தேசிய லொத்தர் சபை | அபிவிருத்தி லொத்தர் சபையின் சந்தையின் பங்கு (சதவீதம்) |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2017 | 14,629 | 16,747 | 47 |
| 2016 | 15,314 | 20,170 | 43 |
| 2015 | 12,280 | 17,394 | 41 |
| 2014 | 12,232 | 15,153 | 45 |
| 2013 | 10,611 | 14,537 | 42 |
| 2012 | 10,668 | 12,024 | 47 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 06 லொத்தர்களின் விற்பனை வருமானம் கருத்திற்கொள்ளும் போது அபிவிருத்தி லொத்தர் சபையின் சந்தைப்பங்கு தேசிய லொத்தர் சபையின் லொத்தர் சந்தையின் பங்குடன் ஒப்பீடு செய்த போது குறைந்த சந்தைப் பங்கினை கைப்பற்றிருந்தது.

(ஆ) 2012 ஆண்டின் போது 47 சதவீதமாகிய சபையின் சந்தைப் பங்கு 2013 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை 42 சதவீதம் முதல் 43 சதவீதம் வரை தளம்பளடைந்து மீண்டும் 2017 ஆண்டின் போது 47 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

## 05. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 “நிகழ்ச்சிநிரலின்” பிரகாரம், ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டியதுடன், மீளாய்வாண்டில் அபிவிருத்தி லொத்தர் சபையினால் தமது விடயப் பரப்பின் கீழ் எடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்படுத்துவது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

மேற்குறித்ததன் பிரகாரம் 2030 “நிகழ்ச்சிநிரலின்” தொடர்பாக அபிவிருத்தி லொத்தர் சபையினால் அறிந்திருக்காததன் காரணமாக அதன் செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டிய மைல்கல்லையும் இலக்குகளை அளவிடுவதற்காக குறிகாட்டிகளையும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2013 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமா்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான வரைவு நிதிக்கூற்றுக்கள் 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், இறுதி நிதிக்கூற்றுக்கள் 05 மாத தாமதத்தின் பின்னர் அதாவது 2018 ஆகஸ்ட் 03 ஆந் திகதியே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 6.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையில் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று நிறுவப்பட்டு 05 பேர்கள் அடங்கிய பதவியணியொன்று இணைக்கப்பட்டிருந்தனர். எனினும் நிறுவனத்தின் விடயப் பரப்பு மேவுகை செய்யப்படக்கூடிய வகையில் போதியளவு பதவியணியினர் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளக கணக்காய்வு விசாரணைகளின் சபையின் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பாக நடவடிக்கைகள் அது தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்தல் செயற்திறனாக இடம்பெறவில்லையென அவதானிக்கப்பட்டது.

### 6.3 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த செயற்பாடு

#### 6.3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 இன் அரச பெறுகை வழிகாட்டல் கோவையில் 4 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் பெறுகை தேவைப்பாடு முறையாக இனங்காணப்படாமையால் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த 50 சதவீதத்திற்கு அண்மித்த பெறுகைகள் செயற்படாதிருந்ததுடன் பெறுகை திட்டத்திற்கு புறம்பாக ரூபா 98.5 மில்லியன் பெறுகைகள் முன் அங்கீகாரமொன்று இல்லாமல் செயற்படுத்தப்பட்டிருந்தது. அதில் ரூபா 56 மில்லியனான பெறுகைகள் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.1.1 (ஈ) பந்தியின் பிரகாரம் பாதிட்டு நிதி ஏற்பாடு இல்லாமல் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மேலும் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் பெறுகை திட்டத்தில் பெறுகை வகை (Procument Catergory) மற்றும் பெறுகை முறைமை (Procument Method) உள்ளடக்கப்படாதிருந்ததுடன் பெறுகை திட்டம் பொறுப்பான உத்தியோகத்தரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 386,847,211 பெறுமதியான 10 பெறுகைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விற்பனை மேம்படுத்தல் உருப்படி கொள்வனவு ரூபா 5,731,645

- விற்பனை மேம்படுத்தல் உருப்படியாக குடைகள் மற்றும் மக் கொள்வனவின் போது பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.2.2 பந்தியின் பிரகாரம் சந்தை ஒப்பிட்டு விலை முறைமையின் கீழ் கேள்வியை சமர்ப்பிப்பதற்காக 07 நாள் காலப்பகுதி வழங்கப்பட வேண்டிய போதிலும் 03 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

– பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.18 பந்தியின் பிரகாரம் கேள்வி மதிப்பீடு செய்யும் போது வெட் வரி கருத்திற்கொள்ளபடக்கூடாத போதிலும். 2500 குடைகளின் விலை மதிப்பீட்டின் போது ஒரு நிறுவனம் பெறுமதி சேர் வரியுடன் விலை மற்றும் மற்றொரு நிறுவனத்தின் பெறுமதி சேர் வரியற்ற விலையுடன் ஒப்பிடப்பட்டதன் காரணமாக ரூபா 138,043 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்ய நேர்ந்திருந்தது.

(ii) பதவியணியிருக்காக மதிய உணவு வழங்கல் ரூபா 7,806,187

2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை பெறுகை செயற்பட்டிருந்தது விலகி சபையின் பதவியணியினருக்காக பகல் உணவு வழங்கியமைக்காக வழங்குனர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் அதற்காக ரூபா 7,816,187 செலவிடப்பட்டிருந்தது. மேலும் ஒவ்வொரு மாத்திரம் போது சேவைக்கு வருகை தந்த எண்ணிக்கையை மிகைத்து உணவு கோரப்பட்டமையால் சபையினால் ரூபா 593,125 கூடுதலான செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(iii) தஷலக்ஷபதி சுபர் பரிசுக்காக வாகனங்களை கொள்வனவு செய்தல்ரூபா 8,643,740**

தஷலக்ஷபதி டிக்கட்டின் சுபர் பரிசாக 04 மோட்டார் கார்கள் கொள்வனவு செய்வதற்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி 2017 பெறுகை திட்டத்திலும் பாதீட்டு மதிப்பிட்டிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4 பந்தி மற்றும் 2017 மார்ச் 15 ஆந் திகதிய பிற்சேர்க்கை 33 இன் பிரகாரம் ரூபா 10 மில்லியன் வரை கொள்வனவு செய்வதற்காக குறைந்தது 5 நிறுவனங்களிலிருந்து முத்திரையிடப்பட்ட கூறுவிலை பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். 5.3.11 வழிகாட்டலின் பிரகாரம் கேள்வி பாதுகாப்பு பிணை பெற்றுக் கொள்ளல் மற்றும் 8.9.1 வழிகாட்டலின் பிரகாரம் உடன்படிக்கைகளுக்கு வருதல் போன்ற நிபந்தனைகளுக்குரியதாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்கு வாகனங்கள் தொடர்பாக அறிவுடன் கூடிய நபரொருவர் நியமிக்கப்படாதிருந்ததுடன், 2017 பெப்ரவரி 27 ஆந் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு அங்கீகாரம் கிடைப்பதற்கு முன்னர் 2017 பெப்ரவரி 18 ஆந் திகதிய உதவி பொது முகாமையாளர் (நிதி) இனால் அம்மோட்டார் காரை கொள்வனவு செய்வதற்கு பரிந்துரைந்திருந்தார்.

(iv) **ரோனியோ இயந்திரங்கள் கொள்வனவு ரூபா 742,500**

நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் மூலம் ரூபா 10 மில்லியனுக்கு குறைந்த கொள்வனவிற்காக சிறிய பெறுகை மற்றும் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் இக் கொள்வனவிற்காக அக் குழுக்களின் அங்கீகாரம் மற்றும் பரிந்துரைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் பெறுகை வழிகாட்டல் கோவையில் 5.3.1 (ஈ) பந்தியின் பிரகாரம் கேள்வி ஆவனங்களை தயாரித்தல், 6.1.4 பந்தியின் பிரகாரம் கேள்வி ஆவணங்களை வழங்கும் போது அறிக்கையொன்று பேணிச் செல்லல், 6.3.1 பந்தியின் பிரகாரம் முத்திரையிடப்பட்ட கேள்வி ஆவணங்கள் பெற்றுக்கொள்ளல், 5.3.11 பந்தியின் பிரகாரம் கேள்வி பாதுகாப்பு சமர்ப்பித்தல், 6.3.3. பந்தியின் பிரகாரம் கேள்வி திறக்கும் குழுவொன்றை நியமித்தல், 6.3.6 பந்தியின் பிரகாரம் கேள்வி ஆவணங்களை திறப்பதை அறிக்கையிடல் மற்றும் அங்கத்தவர்கள் அறிக்கையில் கையொப்பமிடல், 5.3.10 பந்தியின் பிரகாரம் கேள்வி செல்லுபடியான காலப்பகுதியில் நடவடிக்கைகளை பூர்த்தி செய்தல், 8.9.1(ஆ) பந்தியின் பிரகாரம் வழங்குனர் கம்பனியுடன் முறையான உடன்படிக்கைக்கு வருதல் மற்றும் 5.4.10 பந்தியின் பிரகாரம் செயலாற்றல் பிணையொன்று சமர்ப்பித்தல் போன்றவை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(v) ரீ- சேர்ட் கொள்வனவு பெறுமதி ரூபா 10,384,200**

பெறுகை வழிகாட்டல் கைநூலின் 4.2.3 பந்தி மற்றும் 2017 மார்ச் 15 ஆந் திகதிய பிற்சேர்க்கை 31 இன் பிரகாரம் ரூபா 5 மில்லியன் முதல் ரூபா 25 மில்லியன் பெறுமதியான பொருள் கொள்வனவின் போது பெறுகை செயற்பாட்டிற்காக ஆகக் கூடியது 4 வார காலம் மாத்திரம் செலவிடப்பட வேண்டிய போதிலும் ரூபா 10,384,200 தொகையான இக் கொள்வனவிற்காக 193 நாட்கள் எடுக்கப்பட்டிருந்தன.

**(vi) CCTV கமரா முறைமை கொள்வனவு பெறுமதி - ரூபா 3,961,977**

CCTV கமரா முறைமை கொள்வனவுவிற்கான கூறுவிலை சமர்ப்பித்திருந்த 29 நிறுவனங்களுக்கு இடையே 09 நிறுவனங்கள் விதந்துரைகளின் பிரகாரம் கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் 05 நிறுவனங்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கேள்விதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் தொழில்நுட்ப குழுவின் அறிக்கையின் தகவல்களில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. அவ்வாறே முதலாவது ஒப்பந்தத்தை வழங்கிய நிறுவனந்தினால் அத்திகதி முதல் 7 நாட்களுக்குள் செயலாற்றல் பாதுகாப்பினை சமர்ப்பிக்காமல் இருந்ததுடன் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.13 (ஈ) பந்தியின் பிரகாரம் கேள்வி பாதுகாப்பு பிணையான ரூபா 50,000 தொகை சபைக்கு அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(vii) ஊழியர் பயிற்சி செயலமர்வுகளை நடாத்துதல் ரூபா 1,740,549**

மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருந்த இரண்டு ஊழியர் பயிற்சி செயலமர்வுகள் தொடர்பான வேலைத் திட்டங்களை நடாத்துவதற்காக தங்குமிட மற்றும் மண்டப வசதிகள் பெற்றுக் கொள்வதற்காக பெறுகை செயற்பாடு பின்பற்றப்படாமல் தனியார் நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டு ரூபா 401,340 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**(viii) லொத்தர் விளம்பரச் செலவினம் ரூபா 302,609,501**

மீளாய்வாண்டில் சபை லொத்தர் விளம்பர செயற்பாட்டிற்காக ரூபா 302,609,501 செலவிடப்பட்டிருந்ததுடன் சபையின் பெறுகை திட்டத்தில் விளம்பர முகவர் நிறுவனங்களை தெரிவு செய்யும் விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் விளம்பர நிறுவனங்களை தெரிவுசெய்யும் போது 2007 மதியுரை வழிகாட்டல் கோடையின் 3.7.1, 7.4.4, 5.1.1 மற்றும் 5.2.3 பந்திகளின் ஏற்பாடுகளிலிருந்து விலகி வியாபார விளம்பரங்களை வடிவமைப்பதற்கும், விளம்பரத்திற்கும் ரூபா 6,956,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(viii) **லொத்தர் சீட்டு அச்சிட ரூபா 346,417,189**

- லொத்தர் அச்சிடுவதற்காக வழங்குனர் ஒருவர் தெரிவு செய்யும் பெறுகை செயற்பாட்டின் போது பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 மற்றும் 4.2.2 பந்தியின் பிரகாரம் பெறுகை திட்டம் மற்றும் கால அட்டவணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 5.3.2 பந்தியின் பிரகாரம் கேள்வி அழைப்பில் கேள்விதாரருக்கு இருக்க வேண்டிய தேவையான மற்றும் பொருத்தமான தகைமைகள் என்னவென்பது உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பெறுகை குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்படாத சந்தர்ப்பத்தில் கூறுவிலை திறக்கப்படாமல் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டுமென நிதி அமைச்சின் செயலாளரால் ஆலோசனை வழங்கியிருக்கையில் அதனை பின்பற்றாமல் விலை விபரங்கள் திறக்கப்பட்டிருந்ததுடன் 6.3.6 வழிகாட்டலின் பிரகாரம் கூறு விலை திறத்தலை முறைப்படி அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

- கேள்வி பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்ட விஷேட நிபந்தனைகள் 05 ஆம் இலக்கத்தின் பிரகாரம் தேசிய லொத்தர் சபைக்கு லொத்தர் சீட்டுக்களை அச்சிட்டு வழங்கும் நிறுவனங்கள் அச்சிட்டு நடவடிக்கைகளுக்காக தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும் 03 லொத்தர்களின் அச்சிட்டு நடவடிக்கைகளுக்காக தேசிய லொத்தர் சபைக்கு அச்சிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.
- கேள்வி ஆவணங்களில் பின்னிணைப்பு A இன் பிரகாரம் தகைமையுடைய கேள்விதாரருக்கு இருக்க வேண்டிய தகைமைகள் எதுவும் பூர்த்தி செய்யப்படாதிருந்த கேள்விதாரர் 03 லொத்தர் சீட்டுக்கள் அச்சிடுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.
- 2016/2017 ஆம் ஆண்டிற்காக அச்சீட்டு நடவடிக்கைகளுக்குரிய உடன்படிக்கை 2017 யூலை 31 ஆந் திகதி முடிவடைந்திருந்ததுடன் 2017/2018 ஆம் ஆண்டிற்கு புதிய வழங்குனர் ஒருவரை தெரிவு செய்வதற்கான கேள்வி கோரல் பத்திரிகை விளம்பரம் 2017 யூலை 31 ஆந் திகதி வெளியிடப்பட்டிருந்த போதிலும் புதிய வழங்குனரின் அச்சீட்டு நடவடிக்கைகள் 2018 சனவரி முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2017 ஆகஸ்ட் 01 முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குள் பழைய வழங்குனர்களிடமிருந்து அச்சிட்டு நடவடிக்கைகள் மேற்கொண்ட காரணத்தினால் ரூபா 9,125,619 ஆன மேலதிக கிரயமொன்று செலவிடுவதற்கு நேர்ந்திருந்தது.

**(x) தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்மாணம் - ரூபா 2,788,948**

பதிவு செய்யப்பட்ட 9 வழங்குனர்களிடமிருந்து கூறுவிலை கோரியிருந்த போதிலும் ஒரு நிறுவனம் மாத்திரம் கூறுவிலை சமர்ப்பித்திருந்தது. அவ்வாறே பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் கேள்வியை சமர்ப்பிப்பதற்காக 7 நாள் காலம் வழங்கப்பட வேண்டிய போதிலும் 3 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.12 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்திறனான போட்டியொன்று இல்லையென தென்படும் போது கேள்வி நிராகரிக்கப்பட்டு மீண்டும் கூறுவிலை கோரப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் தெரிவு செய்யப்பட்டிருந்த ஒப்பந்தக்காரருடன் 8.9.1 வழிகாட்டியின் பிரகாரம் முறையான உடன்படிக்கையொன்று வந்திருக்கவில்லை.

## 6.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் 2017 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பாதீடு தயாரிக்கப்படும் போது டிக்கட் ஒன்றின் விற்பனை பெறுமதி ரூபா 30 எனக் கருதி தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும் 2017 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் மீண்டும் டிக்கட் ஒன்றின் விற்பனை ரூபா 20 ஆக இருந்தமையால் அதன் பிரகாரம் திருத்திய பாதீடு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினம் பாதிடப்பட்ட வருமானம் செலவுடன் ஒப்பிட முடியாதிருந்தது. அதன் பிரகாரம் பாதீடு நடைமுறை ரீதியாக தயாரிக்கப்படாமை அவ்வப்போது அது மீளாய்வு செய்யப்படாமை காரணமாக போதியளவிலான கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் 5.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் பாதிட்டில் பாதிடப்பட்ட ஐந்தொகையொன்றும் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் சபையின் பாதிடப்பட்ட ஐந்தொகை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டிற்காக சீட்டிழுப்பு மேற்கொள்ளப்படும் லொத்தர் சீட்டுக்கள் மற்றும் உடனடி லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்காக பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 307 மில்லியனாக இருந்ததுடன் பெறுகை திட்டத்தின் பிரகாரம் செலவினம் ரூபா 468 மில்லியனாக இருந்தது. ரூபா 468 செலவினத்தினூடக அத கோடிபத்தி மற்றும் அபிவிருத்தி அதிஷ்டத்திற்கான மதிப்பிடப்பட்ட செலவினமான ரூபா 24 மில்லியன் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 2017 ஆம் ஆண்டிற்காக உள்ளவாறான செலவினம் ரூபா 346 மில்லியனாக இருந்தமையால் பாதீடு, பெறுகை திட்டம் மற்றும் செயல் நடவடிக்கை திட்டம ஒன்றுக்கொன்று அண்மித்ததாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை.

### 6.5. தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரை போதியளவு கவனம் செலுத்தப்படாதிருந்த ரூபா 297,416,453 பெறுமதியான 13 கணக்காய்வுப் பந்திகள் உட்பட 19 கணக்காய்வுப் பந்திகள் தீர்வுசெய்யப்பட்டிருக்கவில்லை.

### 6.6 சமூக பொறுப்பினை நிறைவேற்றுதல்

#### (அ) சனாதிபதி நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு

1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபையின் சட்டத்தின் 11(1) (ஆ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என உறுதிப்படுத்துவதற்கு பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சமூக பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது சர்ச்சைக்குரிய விடயமொன்றாக இருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபையின் சட்டத்தின் 11(1) (ஆ) இன் பிரகாரம் சனாதிபதி நிதியத்திற்கு சபையினால் அனுப்பி வைக்கப்பட்ட பணத்திலிருந்து மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை வழங்கப்பட வேண்டும். எனினும் அபிவிருத்தி லொத்தர் சபைக்காக 2017 ஆம் ஆண்டின் பங்களிப்பான ரூபா 254 மில்லியன் உட்பட 2012 ஆம் ஆண்டிலிருந்து சனாதிபதி நிதியத்திலிருந்து மஹபொல உயர் கல்வி நம்பிக்கை நிதியத்திற்கு கிடைக்க வேண்டியதாக இருந்த ரூபா 972 மில்லியன் பணம் அந்நிதியத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

(ii) மஹபொல உயர்கல்வி புலமைபரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகையில் ரூபா 263 மில்லியன் பெறுமதியான உயர்கல்வி புலமைப்பரிசில் அந்நிதியத்திற்காக சனாதிபதி நிதியத்தின் மூலம் செலவிடுவதற்கும், மஹபொல நிதியத்திலிருந்து அல்லது அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்திலிருந்து அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. சபையினால் சனாதிபதி செயலகத்திற்கும் மஹபொல உயர் கல்வி நிதியத்திற்காக அனுப்பி வைக்கப்பட்ட பண அளவுகள், வரி கொடுப்பனவிற்காக ஈடுசெய்யப்பட்ட பணம் அளவு, மஹபொல உயர்கல்வி புலமைபரிசில் நம்பிக்கை நிதியத்திற்கும் உரித்தாக வேண்டிய பணத்தின் அளவு தொடர்பாக அறிந்துள்ளதாக அவதானிக்கப்படவில்லை. மஹபொல உயர்கல்வி புலமைபரிசில் நம்பிக்கை நிதியத்தினால் கிடைக்கப்பெறும் பணத்தை மாத்திரம் பதிவு செய்யும்

கொள்கையொன்று பின்பற்றப்பட்டமை, சபையினால் பின்தொடர் நடவடிக்கை செயற்பாடு செயற்படுத்தப்பட்டமையால் லொத்தர் சபையின் சட்டத்தின் 11(1) (ஆ) இன் பிரகாரம். நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டதா என்பது சர்சைக்குரிய விடயமொன்றாக இருந்தது.

(iii) 2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் 8.3.9 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்தமையால் இவ்வறிக்கையின் 4.8 (அ) இன் பிரகாரம் சபையிடமிருந்து சனாதிபதி நிதியத்திற்கு இழக்கப்பட்ட பங்களிப்பு ரூபா 7,101,415 ஆக இருந்தது.

**(ஆ) சீட்டிழுப்பு செயற்பாட்டின் வெளிப்படை தன்மை**

மீளாய்வாண்டில் சபையின் 1190 ஆவது லொத்தர் சீட்டிழுப்புக்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 466,033,872 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 1190 சீட்டிழுப்புக்களில் 961 சீட்டிழுப்புக்களுக்காக கணக்காய்வு கண்காணிப்பொன்றோ அல்லது பிரதிநிதிகளை பெற்றுக் கொள்வதற்கு சபையின் கவனம் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(இ) வெகுமதியாளர்களுக்கு பரிசு உரித்தாதல்.**

நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் (SDG-10) எஸ்.டீ.ஜி 10 இன் பிரகாரம் நாட்டில் காணப்படும் ஏற்றத்தாழ்வு தன்மையை குறைக்கும் நோக்கில் ஒட்டு மொத்த பொருளாதாரத்தில் லொத்தர் நலன்கள் பகிரப்படும் விதத்தில் அபிவிருத்தி லொத்தர் சபையின் சீட்டிழுப்பு கட்டமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்படவில்லை. மீளாய்வாண்டின் ஜனவரி மாதம் முதல் ஒக்தோபார் மாதம் வரையான காலப்பகுதியில் சபையினால் நடாத்தப்பட்டிருந்த சீட்டிழுப்பு எண்ணிக்கை 946 ஆக இருந்ததுடன் வெற்றி எண்ணிக்கைக்குரிய பரிசுகளை உடைய லொத்தர்களின் அளவு 25 சதவீதமாக இருந்தது. அங்கு பரிசுக்கட்டமைப்பினை கருத்திற் கொள்ளும் போது ரூபா 250 இற்கு குறைந்த பரிசு பெறுவோரின் சதவீதம் 99.68 ஆக இருந்தது.

தஷலக்ஷபதி லொத்தரில் முதலாம் பரிசிற்காக பணமாக ரூபா 2,500,000 வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக மோட்டார் கார் ஒன்றினை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டில் 04 சீட்டிழுப்பு சந்தர்ப்பங்களில் பரிசாக ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 10,000,000 ஆக இருந்த போதிலும் 04 மோட்டர் வாகனங்களுக்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 8,643,740, ஆக இருந்தமையால் வெகுமதியாளர்களால் இழக்கப்பட்ட தொகை ரூபா 1,356,260 ஆக இருந்தது.

## 7.. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) முகவர்களினால் நேரடியாக செலவு வைக்கப்படுகின்ற பணம் மற்றும் வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்களை இனங்காணும் உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறையொன்றும் காசேடு பேணிச்செல்விதல் முறைமையொன்றை அறிமுகப்படுத்துதல் |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | காசேட்டில் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் மீதிகள் காண்பிக்காமை மற்றும் நிதிக்கூற்றுக்களின் மீதிகள் மற்றும் வங்கி கூற்றுக்களில் மீதிகளுக்கு இடையே அசாதாரணமான வேறுபாடு காணப்பட்டமை தொழிற்படு மூலதன நிலைமையில் அசாதாரணமானதாக குறைவடைந்தமை |
| | | (iii) | பரிசு சந்தர்ப்பங்களின் போது ரூபா 100,000 இற்கு குறைந்த லொத்தர்களுக்காக விற்பனை முகவர்களுக்கு கொடுப்பனவு செய்யும் போது கணக்கு பதிவுசெய்யும் செயற்பாடொன்று பேணிச் செல்லாமை. |
| | | (iv) | கிடைக்கப்படாத பணத்தினை பணம் கிடைத்ததென காசேட்டில் பதிவு செய்தல் |
| (ஆ) | ஆவணங்களை பராமரித்தல் | (i) | பணப் பெறுவனவிற்காக 03 நடைமுறைக கணக்குகுள் காணப்பட்ட போதிலும் அதற்காக ஒரு பெறுவனவு காசேடு மாத்திரம் பேணப்படுதல் |
| | | (ii) | விற்பனை முகவர்களினால் வங்கிக்கு காசு செலவு வைக்கப்படும் போது குறித்த பற்றுச்சீட்டுக்களை பரீடசிக்காமல் காசேடு மாத்திரம் பேணப்படுதல் |
| (இ) | கணக்கீடு | | சபையின் நிதி நிர்வாகத்தினதும் அறிக்கையிடலினதும் கணனி மயப்படுத்தப்பட்ட முறைமைகள் செயற்படுத்த முடியாத பலவீனங்கள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் காணப்படும் பின்வரும் விடயங்கள் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாத சிக்கல்களாக |
| | | (i) | ஒவ்வொரு லொத்தர் விற்பனைக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களின் சரியானதன்மை |
| | | (ii) | ஒவ்வொரு வங்கிக் கணக்கு மீதிகளின் சரியானதன்மை |
| (ஈ) | களஞ்சியக் கட்டுப்பாடு | (iii) | நிதிக்கூற்றுக்களில் காணப்படும் லொத்தர் விற்பனை வருமானத்தின் சரியானதன்மை |
| | | (iv) | பெறவேண்டிய பணத்தின் சரியானதன்மை |
| | | (v) | பரிசு செலவினத்தின் சரியானதன்மை |
| | | (vi) | பெறுகை காசேட்டில் காணப்படும் மீதிகளின் சரியானதன்மை |

| | | |
|---|---|---|
| (உ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | வாகன நிர்ாகத்தல் பலவீனங்கள் காரணமாக வாகன திருத்த செலவினங்கள் அதிகரித்தமை, வாகனங்கள் சிதைவடைந்து காணப்படல் மற்றும் வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நேர்கின்றமை |
| (ஊ) | பெறுகைகள | பெறுகை நடவடிக்கைகள் தொடர்பாக சபையினுள் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று செயற்படுத்தப்படாமை |